click here to Learn more : https://bit.ly/3IdvIAo

# கொள்குறி வினா – விடை (குறிப்புகளுடன்)

- ✶ கற்காலம் / சிந்து சமவெளி நாகரிகம் & வேதகாலம்
- ✶ மௌரியர்கள், குப்தர்கள் இராஷ்டிரகூடர்கள் & இராஜபுத்திரர்கள்
- ✶ மத்திய இந்திய அரசுகள் (பிரத்திகாரர்கள், சௌகான்கள், சந்தேலர்கள், சிசோதியர்கள், பரமாரர்கள், சேனர்கள், சோளங்கியர்கள்)
- ✶ சாதவாகனர்கள், குஷானர்கள் & நந்தர்கள்
- ✶ வர்த்தனர்கள் & சுங்கர்கள்
- ✶ சாளுக்கியர்கள்
- ✶ சங்ககால வரலாறு
- ✶ பாண்டியர்கள்
- ✶ பல்லவர்கள்
- ✶ சோழர்கள்
- ✶ சேரர்கள்
- ✶ டெல்லி - சுல்தான்கள் & பாமினி சுல்தான்கள் (அடிமை வம்சம், கில்ஜி வம்சம், துக்ளக் வம்சம், லோடி வம்சம்)
- ✶ முகலாயர்கள்
- ✶ மராட்டியப் பேரரசு & சீக்கியர்கள்
- ✶ விஜயநகரப் பேரரசு & நாயக்க மன்னர்கள்
- ✶ இந்தியாவில் ஐரோப்பியர்களின் ஆக்கிரமிப்பும் வளர்ச்சியும்
- ✶ கர்நாடக, மைசூர் போர்கள்
- ✶ முதல் இந்திய சுதந்திரப் போர்
- ✶ இந்திய விடுதலை இயக்கம் கி.பி. 1885 - 1919
- ✶ இந்திய விடுதலை இயக்கம் கி.பி. 1920 - 1947
- ✶ இந்திய விடுதலையில் தமிழகத்தின் பங்கு
- ✶ சுதந்திர இந்தியா
- ✶ சமணமதம் &புத்தமதம்
- ✶ சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்கள்
- ✶ பல்வகை வினக்கள்
- ✶ முதல் உலகப் போர் - சர்வதேச சங்கம் (கி.பி. 1914 - கி.பி. 1918)
- ✶ இத்தாலியில் பாசிசம் (1922 - 1945)
- ✶ ஜெர்மனியில் நாசிசம் (கி.பி. 1933 - 1945)
- ✶ இரண்டாம் உலகப்போர் (கி.பி. 1939 - கி.பி. 1945)
- ✶ மறுமலர்ச்சி & சமய சீர்திருத்த இயக்கம்
- ✶ புவியியல் கண்டுபிடிப்புகள்
- ✶ தொழிற் புரட்சி
- ✶ பிரெஞ்சுப் புரட்சி (1789)
- ✶ ரஷ்யப் புரட்சி
- ✶ வியன்னா காங்கிரஸ்
- ✶ பனிப்போர்
- ✶ ஐக்கிய நாடுகள் சபை

www.surabooks.com



click here to Learn more : https://bit.ly/3IdvIAo

click here to Learn more : https://bit.ly/3IdvlAo

# வரலாறு

## 1. கற்காலம் / சிந்து சமவெளி நாகரிகம் & வேதகாலம்

1. **கீழ்க்கண்ட காலங்களை சரியாக வரிசைப்படுத்துக.**

**A)** புதிய கற்காலம், பழைய கற்காலம், செம்புக்காலம், இரும்புக்காலம்
**B)** பழைய கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம், செம்புக்காலம்
**C)** இரும்புக்காலம், செம்புக்காலம், புதிய கற்காலம், பழைய கற்காலம்
**D)** பழைய கற்காலம், புதிய கற்காலம், செம்புக்காலம், இரும்புக்காலம்

**குறிப்புகள்:** **விடை : (D)**

i) பழைய கற்காலம் என்பது கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முந்தைய காலம்
ii) புதிய கற்காலம் என்பது கி.மு. 10,000 – கி.மு. 4000க்கு இடைப்பட்ட காலமாகும்.
iii) செம்புக்காலம் என்பது கி.மு. 3000 – கி.மு. 1500க்கு இடைப்பட்ட காலமாகும்.
iv) செம்புக்காலத்தின் மற்றொரு பெயர் சால்கோலித்திக் காலமாகும்.
v) இரும்புக்காலம் என்பது கி.மு. 1500 – கி.மு. 600க்கு இடைப்பட்ட காலமாகும்.

2. **கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்க.**

I. ஆதிமனிதன் ஒரே இடத்தில் நிலையாக தங்கி வாழவில்லை.
II. ஆதிமனிதன் உணவிற்காக விவசாயம் செய்தான்.
III. இக்கால மனிதன் முதலில் வளர்த்து பழக்கிய விலங்கு குதிரை.

**சரியானவற்றைத் தேர்க.**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** I மற்றும் III சரி **D)** I மற்றும் III சரி

**குறிப்புகள்:** **விடை : (A)**

i) ஆதிமனிதன் ஒரே இடத்தில் வாழாமல் இடம்விட்டு இடம் பெயர்ந்து நாடோடியாகத் திரிந்தான்.
ii) அவன் காடுகளிலும் மரக்கிளைகளிலும் மரப்பொந்துகளிலும் குகைகளிலும் தங்கி வாழ்ந்தான்.
iii) ஆதிமனிதன் சிக்கி முக்கிக் கற்களைப் பயன்படுத்தி நெருப்பை உண்டாக்கினான்.
iv) இக்கால மக்கள் இடி மின்னலுக்கு பயந்து அவற்றை வணங்கத் தொடங்கினர்.
v) ஆதிமனிதன் தன்னை பாதுகாத்துக் கொள்ள இலைத் தழைகள் மரப்பட்டைகள், விலங்குகளின் தோல் ஆகியவற்றை உடையாகப் பயன்படுத்தினான்.

3. **கீழ்க்கண்டவற்றைக் கவனி:**

**கூற்று (A)** : ஆதிமனிதன் ஒரே இடத்தில் வாழாமல் நாடோடி வாழ்வை மேற்கொண்டான்.
**காரணம் (R)** : ஒரே பகுதியில் உணவு கிடைக்காததால் காட்டின் பல்வேறு பகுதிகளுக்கு உணவைத் தேடி இடம் பெயர்ந்தான்.

**சரியான விடையளி.**

**A)** **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி ஆனால் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கமல்ல.
**B)** **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மேலும் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கம்.
**C)** **(A)** சரி ஆனால் **(R)** தவறு.
**D)** **(A)** தவறு ஆனால் **(R)** சரி.

**குறிப்புகள்:** **விடை : (B)**

i) ஆதிமனிதன் உணவிற்காக ஒரே இடத்தில் வாழாமல் இடம் விட்டு இடம் பெயர்ந்தான்.
ii) இக்கால மக்கள் கரடுமுரடான கற்கள், மரக்கிளைகள், எலும்புகள், விலங்குகளின் கொம்புகள் போன்றவற்றை கருவிகளாகப் பயன்படுத்தினர்.
iii) ஆதிமனிதன் காடுகளில் கிடைத்த கனிகள், கிழங்குகள், காய்கள் விலங்குகளின் இறைச்சி போன்றவற்றை உணவாக உண்டான்.
iv) ஒரே பகுதியில் உணவு கிடைக்காததால் காட்டின் பல்வேறு பகுதிகளுக்கு உணவைத் தேடி இடம் பெயர்ந்தான்.

4. **கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?**

I. காய்கனி கிழங்குகள் கிடைக்காத போது ஆதிமனிதன் விலங்குகளை வேட்டையாடி உண்டான்.
II. முதலில் பெரிய விலங்குகளை வேட்டையாடி உண்டான்.

**சரியான விடையளி:**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** I சரி II தவறு **D)** I தவறு II சரி

**குறிப்புகள்:** **விடை : (C)**

i) அக்கால மக்கள் பல்வேறு இயற்கையான கருவிகளை வேட்டையாட பயன்படுத்தினர்.
ii) கற்கள், எலும்புகள், மரக்கொம்புகள், விலங்குகளின் கொம்புகள் போன்றவற்றை கருவிகளாக பயன்படுத்தினான்.
iii) வேட்டையில் ஆண்களும் பெண்களும் பங்கேற்றனர்.
iv) மடியில் குழந்தையைக் கட்டிக்கொண்டு ஒரு பெண் அம்பு விடுவது போன்ற ஓவியம் மத்தியப்பிரதேசத்தில் உள்ள பிம்பேட்கா குகையில் உள்ளது.
v) இந்த ஓவியத்தால் ஆண்களும் பெண்களும் வேட்டையாடினர் என்பதை அறிய முடிகிறது.

5. **தமிழகத்தில் எங்கெல்லாம் பழைய கற்கால கருவிகள் கிடைக்கப் பெற்றது என்பதை கீழ்க்கண்டவற்றிலிருந்து வரிசைப்படுத்துக.**

I. வடமதுரை II. வேலூர்
III. அத்திரம்பாக்கம் IV. திருவள்ளூர்
V. பல்லாவரம் VI. காஞ்சிபுரம்
VII. தென்மதுரை

**சரியான விடையளி:**

**A)** I, II, III, IV, V, VI **B)** I, III, V, VI, II, IV
**C)** II, IV, VI, V, III, I **D)** V, IV, VI, III, I, II

**குறிப்புகள்:** **விடை : (B)**

i) தமிழ்நாட்டில் வட மதுரை, அத்திரம்பாக்கம், பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர் போன்ற இடங்களில் கற்கால கருவிகள் கிடைத்தன.
ii) மத்தியப்பிரதேசத்திலுள்ள சோன் ஆற்று படுகை, பிம்பேட்கா மற்றும் மஹேஸ்வா
iii) லூனி ஆற்றுச் சமவெளி (இராஜஸ்தான்)
iv) பாகல் கோட் (கர்நாடகம்)
v) கர்னூல் குகைகள், ரேணிகுண்டா (ஆந்திரப்பிரதேசம்)

6. **கீழ்க்கண்டவைகளை கவனி:**

I. பழைய கற்கால மக்கள் உணவைத் தேடி அலைந்ததால் அவர்களை உணவை சேகரிப்போர் என அழைக்கின்றனர்.
II. கையளவு கற்கருவி மற்றும் உடைந்த கூழாங்கற்களே இவர்களது ஆயுதமாகும்.
III. இந்த கற்கருவிகள் கெட்டியான குவார்ட்சைட் எனப்படும் பாறைகளாலானவை.

**சரியான விடையளி:**

**A)** I மட்டும் சரி **B)** II மட்டும் சரி
**C)** III மட்டும் சரி **D)** I, II, III சரி

**குறிப்புகள்:** **விடை : (D)**

i) இவ்வகையான பாறை கருவிகள் ஆற்றுப்படுகைகளில் கிடைத்துள்ளன.
ii) உருவத்தில் பெரிய விலங்குகளை வேட்டையாடுவதற்கு பெரிய கற்கோடாரிகளை இவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும்.
iii) இக்கால மக்கள் உணவிற்காக பெரிய குழுக்களாக ஒன்றிணைந்து விலங்குகளை வேட்டையாடியிருக்க வேண்டும்.
iv) இக்கால மக்களின் மொழி மற்றும் தகவல் பரிமாற்றம் குறித்து எதுவும் தெரியவில்லை.



click here to Learn more : https://bit.ly/3IdvlAo

click here to Learn more : https://bit.ly/3ldvlAo



7. **இடைக்கற்காலம் குறித்த தகவல்களில் எது தவறானது?**
 A) மனிதகுல வாழ்க்கையின் அடுத்தக் கட்டத்தை இடைக்கற்காலம் என அழைக்கின்றனர்.
 B) இடைக்கற்காலம் சுமார் கி.மு. 10,000 முதல் கி.மு. 6000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகும்.
 C) பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையேயான காலங்களில் மாற்றங்கள் நிகழவில்லை.
 D) லாங்கன்கன்ஞ் என்ற இடைக்கற்கால சின்னம் குஜராத்தில் காணப்படுகிறது.

**குறிப்புகள்:** **விடை : (C)**
- i) பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையே ஏற்பட்ட மாற்றங்களை இடைக்கற்கால வரலாறு எடுத்துரைக்கிறது.
- ii) இடைக்கற்கால சின்னங்கள் குஜராத்தில் லாங்கன்கன்ச், மத்தியப்பிரதேசத்தில் ஆதம்கார் மற்றும் இராஜஸ்தான், பீஹார் மாநிலங்களிலும் காணப்படுகின்றன.
- iii) பாறைக் குகைகளில் காணப்படும் ஓவியங்களிலிருந்து இடைக் கற்கால மக்களின் சமூக வாழ்க்கைப் பற்றி அறிய முடிகிறது.
- iv) மேற்கண்ட இரண்டு காலங்களிலும் காணப்படாத கற்கருவிகள் இடைக்கற்காலத்தில் கிடைத்தன.

8. **கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:**
 **கூற்று (A)** : இடைக்கற்கால மக்கள் மிகச்சிறிய அளவிலான கற்கருவிகளை பயன்படுத்தினர்.
 **காரணம் (R)** : இக்கால மக்கள் பெரிய விலங்குகளுக்கு பதில் சிறிய விலங்குகளை வேட்டையாடினர்.
 **சரியானவற்றைத் தேர்க.**
 A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மேலும் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கம்
 B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மேலும் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கமல்ல.
 C) **(A)** சரி ஆனால் **(R)** தவறு.
 D) **(A)** தவறு ஆனால் **(R)** சரி.

**குறிப்புகள்:** **விடை : (A)**
- i) இடைக்கற்கால மக்கள் மிகச் சிறிய அளவிலான கற்கருவிகளை வேட்டைக்குப் பயன்படுத்தினர்.
- ii) இக்கருவிகளின் நீளம் அதிகபட்சம் ஐந்து சென்டிமீட்டர் ஆகும்.
- iii) எனவே இக்கருவியை நுண்கற்கருவி அல்லது மைக்ரோலித்திக் என அழைத்தனர்.
- iv) வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் இக்காலத்திலும் தொடர்ந்தன.
- v) பெரிய விலங்குகளுக்குப் பதில் சிறிய விலங்குகளை வேட்டையாடுவதிலும் மீன் பிடிப்பதிலும் இக்கால மக்கள் அதிக கவனம் செலுத்தினர்.

9. **இடைக்கற்காலத்தில் தொடக்ககால வேளாண்மை நடவடிக்கைகள் தொடங்கின என்பதற்கு சான்றாக அமைவது.**
 A) மண்பாண்டங்கள், ஏர் கலப்பைகள் கிடைத்துள்ளன.
 B) அரிவாள் மற்றும் எருதுகளின் பாறை ஓவியம்.
 C) நிலங்கள் மற்றும் வயல்வெளிகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தன.
 D) நாய், மான், பன்றி, தீக்கோழி போன்ற விலங்குகளின் எலும்புகள் கிடைத்துள்ளன.

**குறிப்புகள்:** **விடை : (C)**
- i) இக்கால மக்கள் வேட்டைக்கு வில், அம்பு ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளனர்.
- ii) மேலும் ஒரே இடத்தில் நீண்டகாலம் தங்கி வாழும் போக்கும் வளரத் தொடங்கியது.
- iii) ஆகையால் நாய் போன்ற விலங்குகளை வளர்க்கத் தொடங்கியிருந்தனர்.
- iv) தொடக்ககால நடவடிக்கையாக இக்கால மக்கள் தோட்டப்பயிர் வளர்ப்பு போன்ற வேளாண்மை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

10. **பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் பொருத்தி சரியான விடையைக் காண்க.**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) பிம்பேட்கா | 1. ஆந்திரா |
| b) பாகல் கோட் | 2. மத்தியப்பிரதேசம் |
| c) கர்னூல் | 3. தமிழ்நாடு |
| d) அத்திரம்பாக்கம் | 4. கர்நாடகம் |

**குறியீடுகள்:**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 2 | 4 | 3 | 1 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 2 | 1 | 4 | 3 |

**குறிப்புகள்:** **விடை : (C)**

**இந்தியாவில் பழைய கற்கால கருவிகள் கிடைக்கப்பட்ட இடங்கள்**
- i) மத்தியப்பிரதேசத்தில் சோன் ஆற்று படுகையிலும் பிம்பேட்கா மற்றும் மஹேஸ்வா போன்ற இடங்களில் கிடைத்தன.
- ii) இராஜஸ்தானில் லூனி ஆற்றுச் சமவெளியில் கிடைத்தன.
- iii) ஆந்திராவில் கர்னூல் மற்றும் ரேணிகுண்டாவில் கிடைத்தன.
- iv) தமிழகத்தில் வடமதுரை, அத்திரம்பாக்கம், பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் திருவள்ளூரில் கிடைத்தன.

11. **பழைய கற்கால மக்களைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?**
 A) பழைய கற்காலம் கி.பி. 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.
 B) பழைய கற்கால சான்றுகள் பற்றி பாறைக் கல்வெட்டு மற்றும் ஓலைச் சுவடிகள் குறிப்பிடுகின்றன.
 C) ஒரு சில தாவரங்களை வளர்க்க இவர்கள் முயற்சித்தனர்.
 D) பழைய கற்காலத்திற்கு அடுத்து வந்த காலம் புதிய கற்காலம்.

**குறிப்புகள்:** **விடை : (C)**
- i) பழைய கற்காலம் என்பது கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.
- ii) பழைய கற்கால மக்கள் பற்றிய சான்றுகள் வட இந்தியா, மத்தியப்பிரதேசம், ஆந்திரா, தமிழ்நாடு போன்ற இடங்களில் இயற்கைச் சிதைவுகளாகக் காணப்படுகின்றன.
- iii) காலப்போக்கில் இவர்களது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.
- iv) இவர்கள் விலங்குகளை வளர்க்கவும் கரடுமுரடான மட்பாண்டங்கள் செய்யவும் ஒரு சில தாவரங்களை வளர்க்கவும் முயற்சிகள் மேற்கொண்டனர்.
- v) பழைய கற்காலத்திற்கு அடுத்து வந்த காலம் இடைக் கற்காலமாகும்.

12. **தமிழகத்தில் புதிய கற்காலப் பொருட்கள் கிடைத்த இடம் எது?**
 A) திருவேற்காடு B) கடலூர்
 C) ஆதிச்சநல்லூர் D) பையம்பள்ளி

**குறிப்புகள்:** **விடை : (D)**
- i) மனித நாகரிகத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை புதிய கற்காலத்தில்தான் காணமுடிகிறது.
- ii) புதிய கற்காலம் சுமார் கி.மு. 6000 முதல் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகும்.
- iii) இந்தியாவின் பல பகுதிகளில் புதிய கற்காலப் பொருட்கள் கிடைத்துள்ளன.
- iv) காஷ்மீர் பள்ளத்தாக்கு, பீஹார், உத்திரப்பிரதேசம் மற்றும் தக்காண சமவெளிகளிலும் இக்காலப் பொருட்கள் கிடைத்தன.
- v) தென்னிந்தியாவிலும் குறிப்பிட்ட மாநிலங்களில் இக்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் காணப்படுகின்றன.

13. **கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:**
 **கூற்று (A)** : மனித நாகரிகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை புதிய கற்காலத்தில்தான் காணமுடிகிறது.
 **காரணம் (R)** : புதிய கற்காலம் சுமார் கி.மு. 6000 முதல் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகும்.
 **சரியான விடையளி.**
 A) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மேலும் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கம்.
 B) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி ஆனால் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கமல்ல.
 C) **(A)** சரி ஆனால் **(R)** தவறு.
 D) **(A)** தவறு ஆனால் **(R)** சரி.

**குறிப்புகள்:** **விடை : (B)**
- i) இக்காலத்தில் வேளாண்மை மற்றும் விலங்குகளை வளர்த்தனர்.
- ii) கற்கருவிகளை பளபளப்பாக்கினார்கள், மட்பாண்டம் செய்தார்கள்.
- iii) தாவரங்களை பயிரிடத் தொடங்கியதாலும் விலங்குகளை வளர்த்ததனாலும் ஒரே இடத்தில் தங்கி வாழ முற்பட்டனர்.
- iv) ஒரே இடத்தில் தங்கி வாழ முற்பட்ட புதிய கற்கால மக்கள் கிராம சமுதாயம் உருவாக வழிவகுத்தனர்.



click here to Learn more : https://bit.ly/3ldvlAo

click here to Learn more : https://bit.ly/3IdvlAo



**14. கீழ்க்கண்டவைகளில் புதிய கற்காலம் பற்றிய தவறான கூற்று எது?**

A) புதிய கற்காலப் பொருட்கள் காஷ்மீர் பள்ளத்தாக்கில் கிடைத்தன.
B) தாவரங்களை பயிரிடத் தொடங்கினர்.
C) களிமண் கற்களாலான குடிசைகள் அமைக்கப்பட்டன.
D) தென்னிந்தியாவில் நெல் அதிகம் பயிரிடப்பட்டது.

**குறிப்புகள்:** **விடை : (D)**

i) கருவிகளை உருவாக்குவதிலும் மனிதனுக்குத் தேவையான சாதனங்களைப் படைப்பதிலும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட மாறுதல்களை இக்காலத்தில் தெளிவாகக் காணமுடிகிறது.
ii) மரங்களை வெட்ட பளப்பளப்பான கூர்மையான கோடாரிகளைப் பயன்படுத்தினர்.
iii) புல்லால் ஆன குடிசைகளுக்கு பதில் களிமண் கற்களாலான குடிசைகள் அமைக்கப்பட்டன.
iv) மட்பாண்டங்கள் செய்ய சக்கரம் பயன்படுத்தப்பட்டது.
v) புதிய கற்காலத்தில் கிழக்கிந்தியாவில் நெல் அதிகம் பயிரிடப்பட்டது.

**15. கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?**

I. புதிய கற்காலத்தில் உணவு தானியங்கள் சேமித்து வைக்க மட்பாண்டங்கள் பயன்பட்டன.
II. இக்கால மக்கள் சமைப்பதற்கு வெள்ளி மற்றும் அலுமினியத்தால் ஆன பாத்திரங்களை பயன்படுத்தினர்.

**சரியான விடையளி:**

A) I மட்டும் சரி B) II மட்டும் சரி
C) I மற்றும் II சரி D) I மற்றும் II தவறு

**குறிப்புகள்:** **விடை : (A)**

i) உணவு சமைப்பதற்கும் உணவு தானியங்களை சேமித்து வைப்பதற்கும் மட்பாண்டங்கள் பயன்பட்டன.
ii) இறந்தோரை அடக்கம் செய்வதற்கு பெரிய மட்பாண்ட தாழிகள் பயன்பட்டன.
iii) பல்வேறு இடங்களில் கோதுமை, பார்லி, நெல், தினை போன்றவை பயிரிடப்பட்டன.
iv) நெல் அதிகமாக கிழக்கிந்தியாவில் பயிரிடப்பட்டது.

**16. பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் பொருத்தி சரியான விடையளி:**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) மாஸ்கி | 1. கர்நாடகம் |
| b) பையம்பள்ளி | 2. ஆந்திரா |
| c) உட்னூர் | 3. பீஹார் |
| d) சிராண்ட் | 4. தமிழ்நாடு |

**குறியீடுகள்:**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 2 | 3 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 1 | 4 | 2 | 3 |

**குறிப்புகள்:** **விடை : (A)**

i) கர்நாடக மாநிலம் மாஸ்கி என்ற இடத்தில் புதிய கற்கால பொருட்கள் கிடைத்துள்ளன.
ii) தமிழ்நாட்டில் புதிய கற்கால பொருட்கள் பையம்பள்ளி என்ற இடத்தில் கிடைத்துள்ளன.
iii) புதிய கற்கால பொருட்கள் ஆந்திராவில் உட்னூர் என்ற இடத்தில் கிடைத்துள்ளன.
iv) வட இந்தியாவில் பீஹார் மாநிலத்தில் சிராண்ட் என்ற பகுதிகளிலும் புதிய கற்காலத்தைச் சேர்ந்த பொருட்கள் கிடைத்துள்ளன.
v) தமிழகத்தில் வடமதுரை, அத்திரம்பாக்கம், பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் திருவள்ளூரில் கிடைத்துள்ளன.

**17. மனித நாகரிக வளர்ச்சியின் அடுத்தப் படிநிலை.**

A) பழையகற்காலம் B) புதிய கற்காலம்
C) இரும்புக்காலம் D) இருண்ட காலம்

**குறிப்புகள்:** **விடை : (B)**

i) பழைய கற்கால மனிதன் இடம்பெயர்ந்து உணவைத் தேடி உண்டான்.
ii) பின்பு வேட்டையாடி உண்டான்.
iii) புதிய கற்காலத்தில் தன் உணவை தானே உற்பத்தி செய்து கொள்ள முயன்றான்.
iv) ஆடு, மாடு, கோழி முதலியவற்றை பரிவுடன் வளர்த்து வந்தான்.
v) இதில் மனித நாகரிக வளர்ச்சியின் அடுத்த நிலை புதிய கற்காலம் எனப்படுகிறது.

**18. மனிதன் முதலில் பழக்கி வளர்த்த விலங்கு.**

A) பசு B) குதிரை
C) காளை D) நாய்

**குறிப்புகள்:** **விடை : (D)**

i) புதிய கற்கால மனிதன் பல்வேறு விலங்குகளை வளர்த்தான்.
ii) புதிய தாவரங்களையும் பயிரிட்டான்.
iii) ஆடு, மாடு, கோழி போன்ற வீட்டு விலங்குகளை பரிவுடன் வளர்த்தான்.
iv) இவ்விலங்குகளில் மனிதனால் முதலில் பழக்கப்பட்ட விலங்கு நாய் ஆகும்.
v) நாய் வேட்டையின் போது மனிதனுக்கு உதவியது.
vi) இக்காலத்தின் முக்கிய மாற்றம் உணவு உற்பத்தி ஆகும்.

**19. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:**

**கூற்று (A)** : புதிய கற்காலத்தின் முக்கிய மாற்றம் உணவு உற்பத்தி ஆகும்.
**காரணம் (R)** : அக்காலத்தில்தான் சக்கரமும் உருவாக்கப்பட்டது.

**சரியான விடையளி.**

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான குறிப்புகள்.
C) (A) சரி ஆனால் (R) தவறு
D) (A) தவறு ஆனால் (R) சரி

**குறிப்புகள்:** **விடை : (A)**

i) சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டு சென்றனர்.
ii) சக்கரத்தைப் பயன்படுத்தி மட்பாண்டங்கள் செய்தனர்.
iii) வேட்டையாடி உண்பதை விரும்பிய மனிதன் பின்னர் உணவை உற்பத்தி செய்து உண்டான்.
iv) மேலும் கல்லைத் தீட்டி கூராக்கினான். அதற்கு எலும்பு, மரம் முதலியவற்றால் கைப்பிடிகள் பொருத்தினான்.

**20. பின்வருவனவற்றுள் எது புதிய கற்காலம் பற்றிய சரியான தகவல்களை அளிக்கின்றது?**

A) இக்கால மனிதன் ஒரே இடத்தில் நிலையாக வாழாமல் உணவிற்காக இடம்பெயர்ந்தான்.
B) இவன் சிக்கிமுக்கிக் கற்களைப் பயன்படுத்தி நெருப்பை உண்டாக்கினான்.
C) விலங்குகளைப் பழக்கி வளர்த்தான்.
D) இடி மின்னல்களுக்கு பயந்து அவற்றை வணங்கினான்.

**குறிப்புகள்:** **விடை : (C)**

i) புதிய கற்கால மனிதன் மண் குடிசைகளை அமைத்தான்.
ii) மனிதன் குடியிருப்புகளை உருவாக்கி, கூட்டமாக வாழ்ந்தான்.
iii) குடிசைகள் வட்டம் அல்லது நீள்வட்ட வடிவத்தில் அமைக்கப்பட்டன.
iv) விலங்குகளைப் பழக்கி வளர்த்து மேய்ச்சல் தொழில் செய்தான்.
v) இதன் மூலம் உழவு செய்து பயிர்த்தொழிலும் செய்தான்.

**21. கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?**

A) ஆதிமனிதன் உணவை சேமித்தான்.
B) இறந்தோரைப் புதைக்கும் பழக்கம் பழைய கற்காலத்தில் இருந்தது.
C) தமிழகத்தில் பழைய கற்காலக் கருவிகள் சேலம் புதுக்கோட்டை மாவட்டங்களில் கிடைத்தன.
D) புதிய கற்கால மனிதன் செதுக்கப்பட்ட நயமான கூர்மையான கற்கருவிகளை பயன்படுத்தினான்.

**குறிப்புகள்:** **விடை : (D)**

i) 'ஆதிமனிதன்' என்ற சொல் பழைய கற்கால மனிதனைக் குறிக்கும். இக்கால மனிதன் உணவை சேமிக்கவில்லை மாறாக உணவைத் தேடி அலைந்தான்.
ii) இறந்தோரை புதைக்கும் பழக்கம் புதிய கற்காலத்தில் இருந்தது.
iii) பழைய கற்கால கருவிகள் தமிழகத்தில் வடமதுரை, அத்திரம்பாக்கம், பல்லாவரம் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூரில் கிடைத்தன.
iv) புதிய கற்கால மனிதன் கற்களாலான கருவிகளை பயன்படுத்திய பின்பு உலோகத்தினாலான கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினான்.

**22. கீழ்கண்டவற்றுள் எது சரியான இணை?**

A) கூரை வீடுகள் – சிந்து சமவெளி நாகரிகம்.
B) மேய்ச்சல் தொழில் – பழைய கற்காலம்.
C) தூண்டில் முள் ஊசிகள் – புதிய கற்காலம்.
D) முதலில் பயன்படுத்திய உலோகம் – இரும்பு.



www.surabooks.com
SURA'S

click here to Learn more : https://bit.ly/3IdvlAo

click here to Learn more : https://bit.ly/3IdvlAo



**குறிப்புகள்:** **விடை : (C)**

i) கூரைகளால் வேயப்பட்ட வீடுகள் புதிய கற்காலத்திலேயே கட்டப்பட்டன.

ii) மேய்ச்சல் தொழில் மற்றும் கால்நடை வளர்த்தல் ஆகியவையும் புதிய கற்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

iii) புதிய கற்காலத்தில்தான் கோடாரி எலும்புக் கைப்பிடிகள் தூண்டில் முள், ஊசிகள் வெட்டுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

iv) மனிதன் அறிந்த முதல் உலோகம் செம்பு ஆகும். பிறகு படிப்படியாக மற்ற உலோகங்களை பயன்படுத்தத் தொடங்கினான்.

**23. கீழ்க்கண்டவற்றைக் ஆராய்க:**

**கூற்று (A)** : புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் செம்பு கற்காலம்.

**காரணம் (R)** : இக்காலத்தில் இரும்பு மற்றும் வெண்கலம் பயன்படுத்தப்பட்டன.

**சரியான விடையளி.**

A) **(A)** சரி ஆனால் **(R)** தவறு.

B) **(A)** தவறு ஆனால் **(R)** சரி.

C) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மேலும் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கம்.

D) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி ஆனால் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கமல்ல.

**குறிப்புகள்:** **விடை : (A)**

i) பழைய கற்காலம் அடுத்து புதிய கற்காலம் புதிய கற்காலத்தை அடுத்து வந்த காலம் செம்புக்காலமாகும்.

ii) இக்காலத்தில் செம்பு மற்றும் வெண்கலம் ஆகிய உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன.

iii) மனிதகுல வரலாற்றில் உலோகத்திலான பொருட்களை உருவாக்கி பயன்படுத்தியதும் முக்கிய நிகழ்வுகளாகும்.

iv) ஆனாலும் உலோக காலத்திலும் ஒரு சில நுண்கருவிகள் முக்கியத்துவம் பெற்று விளங்கின.

**24. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியானவை?**

**I.** உலோகக் கால மக்கள் உலோகத் தாதுக்களைத் தேடி நெடுந்தூரம் பயணம் செய்தனர்.

**II.** இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் செம்பு கற்காலப் பண்பாடுகள் காணப்படுகின்றன.

**III.** செம்பு கற்காலப் பண்பாடுகள் பொதுவாக கிராமங்களிலேயே வளர்ச்சி அடைந்தன.

**சரியானவற்றைத் தேர்க:**

A) **I** மற்றும் **III** சரி  B) **I** மட்டும் சரி

C) **II** மட்டும் சரி  D) **I** மற்றும் **II** சரி

**குறிப்புகள்:** **விடை : (D)**

i) உலோகத் தாதுக்களைத் தேடி மக்கள் நெடுந்தூரம் பயணம் செய்ததால் செம்பு – கற்காலப் பண்பாடுகளிடையே தொடர்புகள் ஏற்பட்டன.

ii) பொதுவாக ஆற்றங்கரைகளிலேயே செம்பு – கற்காலப் பண்பாடுகள் வளர்ச்சியடைந்தன.

iii) குறிப்பாக ஹரப்பா பண்பாடு செம்பு – கற்காலப் பண்பாட்டின் ஒரு பகுதியாகும்.

iv) தென்னிந்தியாவில் கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, பெண்ணாறு, காவிரி ஆகிய நதிக்கரைகளில் இக்கால குடியேற்ற மக்கள் வளர்ச்சியடைந்தனர்.

**25. வரலாற்றுக்கு முந்தையக் காலம் என்பது எது?**

A) எழுத்து ஆதாரங்கள் கிடைத்துள்ள காலம்.

B) எழுத்து ஆதாரங்கள் கிடைக்காத காலம்.

C) காலம், இடம், நிகழ்ச்சி ஆகிய மூன்று ஆதாரங்களும் கிடைத்துள்ள காலம்.

D) வரலாற்றின் முக்கியக் காலம்.

**குறிப்புகள்:** **விடை : (B)**

i) மக்கள் வாழ்ந்த காலம், அக்கால மக்களின் பண்பாடு போன்றவற்றை அறிய உதவும் ஆதாரங்கள் எழுதப்பட்ட ஆதாரமாகும்.

ii) மேலும் பழங்காலத்தில் பயன்பட்ட பல்வேறான பொருட்களை பற்றி அறிவது வரலாற்று ஆதாரமாகும்.

iii) பொதுவாக வரலாற்றுக் காலம் வரலாற்றுக்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு பிந்தைய காலம் என இருவகைப்படும்.

iv) அக்கால மனிதர்கள் குறித்த எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் கொண்ட காலத்தை வரலாற்றுக் காலம் எனலாம்.

v) இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுகள், செப்பு பட்டயங்கள், ஓலைச்சுவடிகள் போன்றவை எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் ஆகும்.

**26. கீழ்க்கண்டவற்றைக் ஆராய்க:**

**கூற்று (A)** : உலோக காலத்தின் தொடக்கத்தில் இவர்கள் உலோகத்தை பயன்படுத்தவில்லை.

**காரணம் (R)** : என்றாலும் சுமார் கி.மு. 2000 ஆண்டுவாக்கில் செம்பும் வெண்கலமும் இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

**சரியான விடையளி.**

A) **(A)** சரி ஆனால் **(R)** தவறு.

B) **(A)** தவறு ஆனால் **(R)** சரி.

C) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி மேலும் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கம்.

D) **(A)** மற்றும் **(R)** இரண்டும் சரி ஆனால் **(R)** என்பது **(A)** விற்கு சரியான விளக்கமல்ல.

**குறிப்புகள்:** **விடை : (C)**

i) தமிழ்நாட்டில் இக்காலத்தை சேர்ந்த பொருட்கள் பையம்பள்ளியில் கிடைத்துள்ளன.

ii) இங்கு வெண்கலம் மற்றும் செம்பு ஆகியவற்றிலான பொருட்கள் சுடுமண் உருவங்கள் மட்பாண்டங்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

iii) பொதுவாக ஆற்றங்கரைகளிலேயே செம்பு கற்காலப் பண்பாடு வளர்ச்சியடைந்தது.

iv) மேலும் ஹரப்பா பண்பாடு செம்பு கற்கால பண்பாட்டின் ஒரு பகுதியாகும்.

**27. செம்பு கற்காலத்தை அடுத்து வந்த காலம்.**

A) உலோகக்காலம்  B) முன் வேதகாலம்

C) பின் வேதகாலம்  D) இரும்புக்காலம்

**குறிப்புகள்:** **விடை : (D)**

i) தென்னிந்தியாவில் இரும்புக்காலமும் பெருங்கல்காலமும் சமகாலம் எனக் கருதப்படுகிறது.

ii) பெருங்கல் காலத்தின் மற்றொரு பெயர் மெகாலித்.

iii) மெகாலித் என்பதன் பொருள் பெரிய கல் என்பதாகும்.

iv) இது கல்லறைகள் மேல் சுற்றி அடுக்கப்பட்ட கற்களைக் குறிக்கின்றது.

v) இத்தகைய கல்லறைகள் தென்னிந்தியாவில் ஏராளமாக காணப்படுகின்றன.

vi) இக்கல்லறைகளில் இரும்பு, மண்வெட்டி, அரிவாள் போன்ற ஆயுதங்கள் கிடைத்துள்ளன.

**28. பழைய கற்கால கல்லறைகள் கீழ்க்கண்டவற்றில் எங்கு உள்ளது?**

A) கேரளாவில் வைக்கம் பகுதி.

B) தமிழகத்தில் மாமல்லபுரம்.

C) கர்நாடகத்தில் ஹல்லார் பகுதி.

D) உத்திரப்பிரதேசத்தில் லக்னோ பகுதி.

**குறிப்புகள்:** **விடை : (C)**

i) இந்தியாவில் இரும்புகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் பல்வேறு இடங்களில் உள்ள கல்லறைகளில் கிடைத்துள்ளன.

ii) கர்நாடக மாநிலத்தில் ஹல்லார், மாஸ்கி போன்ற இடங்களில் இத்தகைய கல்லறைகள் காணப்படுகின்றன.

iii) ஆந்திரப்பிரதேசத்தில் நாகார்ஜுன கொண்டாவில் காணப்படுகிறது.

iv) தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ளன.

v) மேற்கண்ட இடங்களில் உள்ள கல்லறை குழிகளில் கருப்பு – சிவப்பு வண்ணத்திலான பானையோடுகள் இரும்பு மண்வெட்டிகள், அரிவாள் மற்றும் சிறு ஆயுதங்களும் இங்கு காணப்படுகின்றன.

**29. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:**

**I.** சிந்து பள்ளத்தாக்கில் மேற்கு பஞ்சாபிலுள்ள ஹரப்பா சிந்து மாகாணத்திலுள்ள மொகஞ்சாதரோ ஆகிய இடங்களில்தான் முதன் முதலில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**II.** இந்த இரண்டு இடங்களும் தற்போது பாகிஸ்தானில் உள்ளன.

**சரியான விடையளி:**

A) **I** மட்டும் சரி  B) **II** மட்டும் சரி

C) **I** மற்றும் **II** தவறு  D) **I** மற்றும் **II** சரி

**குறிப்புகள்:** **விடை : (D)**

i) இந்த அகழ்வாய்வின் பயனாக ஒரு சிறந்த சிந்துசமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது.

ii) இந்த அகழ்வாய்வு கி.பி.1921–இல் நடைபெற்றது.

iii) தொடக்கத்தில் இந்த நாகரிகம் சிந்துவெளி நாகரிகம் என அழைக்கப்பட்டது.

iv) சிந்துவெளிக்கு அப்பாலும் இந்த நாகரிகத்தின் தடங்கள் பரவியிருந்தன.

v) இதனால் இந்த நாகரிகம் சிந்துசமவெளி நாகரிகம் என அழைக்கப்பட்டது.



www.surabooks.com SURA'S

click here to Learn more : https://bit.ly/3IdvlAo